**பலபிடிய பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 20 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, பலபிடிய பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 75,800 தொகைக்கான புறக்குவிவான கண்ணாடி இரண்டின் பெறுமதியினை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) 2010 ஆண்டின் போது அகற்றப்பட்டிருந்த 19 கடைகளுக்காக 2016 ஆண்டின் இடையறாமல் கடை வாடகை சிட்டையிடப்பட்டிருந்த ரூபா 813,414 தொகை அறவிடப்பட வேண்டியவை என கணக்குகளில் காட்டியிருந்த போதிலும் அவ்வாறான தொகையொன்று அறவிடப்பட வேண்டிக்காணப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காகிதாகிகள் இருப்பில் அடங்க வேண்டிய 78 வகையான அச்சுப்பதிவேடுகள் மற்றும் அடியிதழ் புத்தகங்களின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 7,093,740 இற்கான பங்களிப்புத் தொகையை நிதிக்கூற்றுக்களில் கடன் கொடுத்தோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 50,920,884 12 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே இணக்கமின்மைகளின் கூட்டுத்தொகைகளின் பிரகாரம் ரூபா 12,226,688 தொகையாகும்.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2008 ஆண்டிற்கான ரூபா 263,619 தொகை முத்திரை கட்டணமும், 2014 ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 3,556 தொகைக்கான உத்தியோகத்தர்களின் கையில் காசு, மூலதன உதவி மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 730,811 தொகை, 2010 ஆண்டிற்கான ரூபா 85,400 தொகையியான கடைவாடகையும் ஆக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,056,386 தொகையினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2012 ஆண்டு முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 2,089,646 இற்கான 03 வைப்பு மீதிகளை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| (i) விதி 33 | - | வீதி வரி செலுத்துவதை புறக்கணிப்பு நபர்கள் தொடர்பாக அட்டவணைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. |
| (ii) விதி 143 | - | திருப்பி செலுத்த வேண்டிய வைப்புப் பேரேடு மாதாந்தம் சமப்படுத்தி, பிரதான பேரேட்டுக் கணக்கு மீதியுடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. |
| (iii) விதி 145 | - | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக விரிவான கூற்றொன்று தயாரித்து பேரேட்டில் காணப்படும் மீதியுடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |
| | நிதிப்பிரமாணம் 571 | 6,384,711 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள 744 வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 41,924,230 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 44,118,884 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபையினால் பேணப்படுகின்ற 03 வங்கி நடைமுறைக் கணக்குகளில் மீளாய்வாண்டின் போது காணப்பட்ட சராசரி மாதாந்த மீதி ரூபா 36,667,207 தொகை காணப்பட்ட போதிலும் அந்த மிகை நிதியினை முதலீடு செய்து மேலதிக வருமானம் உழைத்தல் தொடர்பாக சபை கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,830,000 | 6,430,242 | 4,690,870 | 13,221,748 | 5,400,000 | 3,793,678 | 4,162,565 | 11,284,215 |
| வாடகை | 2,600,000 | 128,550 | 96,550 | 898,813 | 2,050,000 | 159,600 | 159,668 | 1,147,838 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,505,000 | 4,691,833 | 4,685,582 | 190,280 | 2,502,000 | 3,963,050 | 3,960,050 | 187,780 |
| ஏனைய வருமானங்கள் | 33,580,000 | - | 7,465,219 | - | 32,385,000 | - | 32,054,057 | - |
| | 45,515,000 | 11,250,625 | 16,938,221 | 14,310,841 | 42,337,000 | 7,916,328 | 40,336,340 | 12,619,833 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு மொத்த வருமானம் ரூபா 45,515,000 தொகையும், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 11,250,625 வும் காணப்பட்டது. ரூபா 12,619,833 தொகையான ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 23,870,458 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 16,938,221 தொகை ஆகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 14,310,841 தொகையாகும்.

### 2.3.3 வீதவரி

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 11,284,215 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 6,430,242 தொகை ஆண்டிற்கான சிட்டையிடல் உடன் ரூபா 17,714,457 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 4,690,870 தொகை ஆக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 13,221,748 தொகை அளவான கூடுதலான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. நிலுவை தொகை அறவீடு செய்தல் தொடர்பாக பிரதேச சபை சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.4 வாடகை

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 1,147,838 இற்கான நிலுவை மற்றும் ரூபா 128,550 இற்கான சிட்டையிடலுடன் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,270,388 தொகையாக காணப்பட்டது. ஆண்டின் போது சுமார் 30 சதவீதம் அறவிடப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை வாடகை மீதி ரூபா 898,813 தொகை அளவான கூடிய பெறுமதி ஒன்றினை பெற்றிருந்தது.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 71,854,145 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,608,633 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிக் காணப்பட்ட செய்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நோக்கி நெருங்காமை**

(i) 2016 ஆண்டிற்கான தென்மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியம் ரூபா 1,000,000 தொகையும், சபை நிதியம் ரூபா 587,708 தொகையும், செலவிடப்பட்டு திண்ம கழிவுப்பொருள் நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2018 ஆண்டிற்கான கணக்காய்வு சந்தர்ப்பத்திலும் அக் கட்டிடத்தை குறிக்கோள் சார் கருமத்திற்கு பயன்படுத்தியிருகவில்லை. சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுப்பொருட்கள் கட்டிடத்திற்கு அண்மையில் குவிக்கப்பட்டு காணப்பட்டது.

(ii) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டதிற்காக உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து ரூபா 1,000,000 தொகைக்கான கெட்டியான பிளாஸ்டிக் அரைக்கும் இயந்திரமொன்று மற்றும் கெட்டியான பிளாஸ்டிக் கழுவும் இயந்திரமொன்றும் கிடைக்கப்பட்டு பொருத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இந்த இயந்திரத்தை செயற்படுத்துவதற்காக மின்சாரம் வழங்குவதற்காக சபையினால் ரூபா 178,190 தொகை செலவிடப்பட்டிருந்தத போதிலும் 2018 ஏப்ரல் 23 திகதி அளவிலும் அவ் இயந்திரத்தினை குறிக்கோள் சார் கருமத்திற்கு பயன்படுத்தியிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

ஹீனடிய பெத்த எனும் தனியார் காணி ஒன்றில் சபையினால் குப்பைகள் போடப்பட்டிருந்தது. ஒரு நாளைக்கு 10 தொன் அளவு குப்பை சேகரிக்கப்படுவதுடன் அவை வகைப்படுத்தப்படாமல் காணியில் போடப்பட்டிருந்ததுடன் காணி பூராகவும் குப்பை பரந்திருந்த காரணத்தினால் துர்நாற்றத்துடன் காணப்பட்டது. மண் போடப்பட்டு குப்பைகளை மூடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 03 சந்தர்ப்பங்களில் ரூபா 660,850 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஆண்டு நவம்பர் மாதத்தின் பின்னர் மண்போடப்பட்டு மூடப்படுவதும் நடைபெற்றிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

## 3.2 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆளணித்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளில் 09 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அதே போல் மிகை பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 25/2014 முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு இணங்காமல் சபையினால், மீளாய்வாண்டின் போது பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 06 ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்துவதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 2,065,465 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) சபையில் அலுவலக உதவியாளர்கள் இருவருக்கு மற்றும் மூன்று தொழிலாளர்களுக்கு, முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பதவிகளில் கடமைகள் சாட்டப்பட்டிருந்தது.

(ஈ) இரண்டு நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 137,074 தொகைக் கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை ஏதும் மீளாய்வாண்டின் போது எடுத்திருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 விளைவற்ற / குறைபயன்பாட்டு சொத்துக்கள்

10 வருடங்களை விட மிகையான காலம் விளைவற்று காணப்படும் சபைக்கு சொந்தமான கப் வண்டி ஒன்றினை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் உக்கப்படும் நிலையில் காணப்பட்டது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 07 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 18,457,370 இற்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அப்பெறுமதி 05 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது.

(ஆ) ஒரு செலவு விடயத்தில் மதிப்பீட்டு ஏற்பாடுகளின் எல்லையை மிகைத்து ரூபா 23,015,783 இற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அப்பெறுமதி 3,068 சதவீதமாகும்.

(இ) 04 வருமான விடயத்தில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 20,931,808 தொகையாக காணப்பட்டதுடன் அப்பெறுமதி 12 சதவீதம் முதல் 30 சதவீதத்திற்கு இடையே வீச்சில் காணப்பட்டது.

(ஈ) 03 வருமான விடயங்களின் அனுகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 15,667,668 தொகையாக இருந்ததுடன், அப்பெறுமதி 18 சதவீதம் முதல் 40 சதவீதம் இடைப்பட்ட வீச்சில் இருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபையில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதிலும், போதியளவான உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | | முறைபாடு | |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கணக்கீடு செய்திருக்காமை. |
| | | (ii) | பொது இடங்களின் மீதான தகவல்கள் அடங்கிய பதிவேடு பேணப்பட்டிருக்காமை. |
| | | (iii) | நட்டங்கள் மற்றும் சேதங்கள் மீதான பதிவேடு பேணப்பட்டிருக்காமை. |
| | | (iv) | விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள் காணப்படல். |
| (ஆ) | பதவியணி முகாமைத்துவம் | (i) | வெற்றிடங்களை நிரப்பாமை |
| | | (ii) | கடன்மீதிகளை அறவீடு செய்யாமை |
| | | (iii) | பதவிகளுக்கு பொறுத்தமான விதத்தில் வேலை சாட்டுதல் மேற்கொள்ளாமை. |
| (இ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வீதவரி அறவீடு செய்யாமை. |
| | | (ii) | முத்திரைக் கட்டணம் அறவீடு செய்யாமை. |
| | | (iii) | குப்பைவரி அறவீடு செய்யாமை. |
| | | (iv) | மிகைப் பணத்தினை முதலீடு செய்யாமை. |
| (ஈ) | கணக்கீடு மற்றும் பதிவேடுகள் பேணல் | (i) | கடந்த ஆண்டுகள் முதல் காணப்படும் கணக்கு மீதிகளில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளாமை. |
| | | (ii) | அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, வித்தியாசங்கள் காணப்படாமை. |
| | | (iii) | இருப்பு மீதிகளை கணக்கீடு செய்திருக்காமை. |